வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
ஆனந்த
பரவசம்
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

வேதாத்திரியப் பார்வையில்

திருவாசகத்தின் ஆனந்த பரவசம்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

(பக்குவம் முதிர்ந்த உயிர் மெய்யுணர்வின் வாயிலாகத் திருவருளைப் பற்றி நின்று பேரின்பம் நுகர்தல்)

இதனுள்ளே

1. அச்சத்தாலே ஆழ்ந்திடுன்றேன்
2. ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன்
3. தவமும் தற்சோதனையும்
4. கடவுளை காண வழி இருக்கிறதா?
5. அறுகுண சீரமைப்பு தரும் ஆனந்த வாழ்வு
6. ஆன்மீகத்தில் நல்லொழுக்கம்
7. நல்லாரிணக்கமும் சத்சங்கமும்
8. விழிப்பு நிலை சீவன்முக்தி
9. அறிவின் அகநோக்குப் பயணம்
10. அழுதே சாதித்தார்கள் ஞானிகள்

1.அச்சத்தாலே ஆழ்ந்திடுன்றேன்

பிறவித் துன்பம் நீங்குவதற்கு இறைவனிடத்திலும் அவன் உள்ளிருந்து இயக்குகின்ற உயிர்களிடத்திலும் அன்பு பாராட்டுதலே எளிய வழி.

அன்பு நெறியாகிய சிவ நெறி குறிப்பிடும். உடல், உலகம், உடலுள் இருக்கின்ற மனம், சித்தம், புத்தி, மனவெழுச்சி என்ற உட்கருவிகள், மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார் உறவினர், செல்வம், வீடு, வாசல் என்று உலக நுகர்ச்சிப் பொருள்களையும் தந்த இறைவனுக்கு

நன்றி மனப்பான்மையால் சிவத்தொண்டுகள் செய்தால் அன்பு பெருக்கெடுக்கும் பிறவி நீங்கும்

இனி பெருமான் உள்ளே வாழுகின்ற உயிர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் எப்படி அன்பினைப் பெருக்கிப் பிறவிப் பெருங்கடலை நீந்துவது?

- "அன்பர் பணி செய்திடவே ஆளாக்கி எனை விட்டுவிட்டால், இன்ப நிலை தானே வந்து எய்துமே பராபரமே" என்பார் தாயுமானவர்.
- உயிர்களுக்கு அன்பு செய்தால் பெருமான் திருவடிப் பேறு கிட்டும் என்கிறார் தாயுமானவர்.
- "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" எனவும் "நடமாடக் கோயில் நம்பர்க்கொன்று ஈயில் அது படமாடக் கோயில் பகவர்க்குதாமே" என்கிறார் திருமூலர்.

இனம், மொழி, நிறம், சமயம், நாடு, சாதி, படிப்பு, அழகு, வயது என்ற வேறுபாடுகளையெல்லாம் மறந்து எவர் ஒருவர் தன்னளவில் இயன்ற உதவிகளைப் பிற உயிர்களுக்குச் செய்கின்றாரோ அவரே எளிதில் இறைவனை அடையலாம்;

பிறவி துன்பத்தை நீங்கலாம் என்று வாழ்ந்து காட்டிய அருளாளர் பெருமக்கள் குறிப்பிடுகின்றனர்.

உணவு, உடை, பொருள், உழைப்பு, அறிவு, என்று எது நம்மால் முடியுமோ அவற்றை ஈந்து மக்கள் தொண்டினைச் செய்திருக்கின்றனர்

- நம் அருளாளர்கள். பணம் இல்லாத திருக்குறிப்புத் தொண்டர் எனும் நாயனார் அடியவருக்குத் துணி வெளுத்துக் கொடுத்துத் தம் உழைப்பைக் கொடுத்திருக்கின்றார்.
- இளையான்குடி மாறனார் பசித்துத் தம் இல்லம் வந்த அடியார்களுக்கு உணவளித்திருக்கின்றார்.
- சிறுத்தொண்டர் சிவனடியார்களைத் தேடிச் சென்று உணவளித்துள்ளார்.

- கணநாதர் என்னும் நாயனார் இலவசமாக மக்களுக்குச் சமய அறிவையும் கல்வியையும் புகட்டி இருக்கின்றார்.
- மேன்மை மிகு பைந்தமிழர் போற்றும் சைவ சமயத்தின் இரு கண்களான திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் மடங்கள் அமைத்து மக்கள் தொண்டு செய்திருக்கின்றார்கள் என்பதனைச் தெய்வச் சேக்கிழார் தாம் அருளிய திருத்தொண்டர் புராணத்தில் திறம்பட விளக்கியுள்ளார்.

நாமும் இன்றைய சூழலுக்கு ஏற்ப பல வழிகளில் மக்கள் தொண்டினைச் செய்து அன்பின் பிழம்பாய்த் திகழலாம்.

வேலை வாய்ப்புக்கள், கல்வி வாய்ப்புக்கள், பொருளீட்டும் வாய்ப்புக்கள் போன்றவற்றைத் தெரிவிக்கவும் அதனைப் பெறுவதற்கும் துணை நின்று தொண்டாற்றலாம்.

அவரவர் பணி இடங்களிலேயும் ஆலயங்களிலேயும் பள்ளிகளிலேயும் பனிமனைகளிலேயும் இருந்தவாறே கல்வி, சமயம், ஒழுக்கம், தன்முனைப்பு, தொழிற்கல்வி போன்றவற்றினை நல்கி தொண்டாற்றலாம். தம்மால் முடியாவிடில் முடிந்தவர்களின் துணையை நாடி மக்களுக்கு விழிப்புணர்ச்சியும் எழுச்சியும் கொடுப்பதும் அரிய மக்கள் தொண்டே!

ஆலயங்கள் பள்ளிகள் போன்றவை நன்னெறிப் பண்புகளை வளர்ப்பதிலும் சமய அறிவைப் பெருக்குவதிலும் ஆற்றுகின்ற பணிகளும் மக்கள் தொண்டே என்பது தெளிதற்பாலது.

இல்லத் தலைவர்கள், இல்லத்தில் இருந்தபடியே உயிர்த் தொண்டினைச் செய்யலாம் என்று வள்ளுவப் பேராசான் அழகுற இயம்புவார்.

இல்லத்தில் உள்ளவரிடத்தே உண்மையான அன்பு பாராட்டுதலே பிறவிப் பெருந் துன்பத்தை அறுக்க வழிவகுத்துவிடும் என்பார்,

இயல்புடைய மூவர்க்கும் நல்ல துணையாக நிற்றலே நம் பிறவியை அறுக்க உதவும் என்பார். ஈன்ற பெற்றோர், இன்பத்திலும்

துன்பத்திலும் நமக்கு உறுதுணையாக இருக்கும் மனைவி, நம் செல்வமாகிய பிள்ளைகள் ஆகிய இம்மூவரிடத்தே உண்மையான அன்பு பாராட்டி, அவர்களுக்கு உற்ற துணையாய் நின்று அறநெறியில் தவறாது ஒழுகினால், அன்பின் பிழம்பாய் மாறி, இறை உலகிற்கு வழி திறக்கும் என்பார் பொய்யாமொழிப் புலவர்.

தவிர இல்லவாழ்வின் வழி நின்று அன்பு பெருக்கெடுக்கும் வழியினைக் கண்டு பிறவி அறுதலுக்கு ஆற்ற வேண்டிய இன்னும் சில உயிர்த் தொண்டுகளைச் சொல்வார் நம் வள்ளுவர். நம் முன்னோர் தெய்வம், விருந்தினர், உறவினர், என்பவரோடு தன்னையும் அன்போடு வைத்துப் போற்றுபவர் இல்லறத் தவம் இயற்றுபவர் என்கின்றார்.

வயது முதிர்ந்த பெற்றோரை அன்போடு வைத்துப் போற்றுதலும்,பெற்ற பிள்ளைகளுக்கு வேண்டுவன அமைத்துக்கொடுத்தலும்,

அவர்களை அன்பு பாராட்டி வளர்த்தலும், வாழ்வில் உயர்வதற்கு வாழ்க்கைத் துணை நலமாக அமைந்த இல்லாளை அன்போடு பேணியும் உடன் பிறப்புக்களை நம் அரண்களாக எண்ணி அன்பு பாராட்டியும்

வறியவரையும் உறவினரையும் அன்பால் காத்தும் இறைவழிபாட்டினைத் தவறாது செய்தும் மனத்தால், வாக்கால், உடலால் நல்லவற்றையே செய்வோமேயானால் இறை உலகிற்கு வழி பிறந்து பிறவி அறும் என்கின்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

உயிர்த் தொண்டு என்பது மாந்தரிடத்து மட்டும் அன்றி அதற்கு மேற்சென்று பிற உயிர்களிடத்தும் அன்பு பாராட்டவேண்டும் என்று பெருநெறியாகிய சிவநெறி காட்டுகின்றது.

உயிர் அன்பு ஒருமைப்பாட்டினை உணர்த்திய இராமலிங்க அடிகள், “மண்ணுலகத்திலே உயிர்கள் தாம் படும் வருத்தத்தைக் கண்ணுறப் பார்த்தும் செவியுறக்கேட்டும் சற்றேனும் சகியமாட்டேன்” என்றார்.

எப்பாரும் எப்பதமும் சென்றே நான் ஆருயிகளுக்கெல்லாம் அன்பு செய்தல் வேண்டும்” என்பார்.

ஆருயிர்களுக்கு உயிர்தொண்டு செய்தல் எனும் அன்பு பாராட்டும் எளிய வழியினைப் பின்பற்றி, எல்லோரிடமும் அன்பு பாராட்டி, இறைவனை வழிபட்டு, உள்ள அழுக்கினைப் போக்கிப் பிறவிப் பெருந் துன்பத்திலிருந்து நீங்கிப் பெருமானின் திருவடிப் பேரின்பத்திற்கு ஆளாவோமாக!

“விச்சுக் கேடு பொய்க்கு ஆகாது
  என்று இங்கு எனை வைத்தாய்
இச்சைக்கு ஆனார் எல்லாரும்
  வந்து உன்தாள் சேர்ந்தார்
அச்சத்தாலே ஆழ்ந்திடு
  கின்றேன் ஆரூர் எம்
பிச்சைத் தேவா என் நான்
  செய்தேன் பேசாயே”. (திருவாசகம்85)

- திருவாரூரில் எழுந்தருளி இருக்கும் பிச்சை ஏற்கும் எம்பெருமானே!
- பொய்கான விதை அழிந்து விடுதல் கூடாது என்பதற்காக என்னை இன்னும் இவ்வுலகில் விட்டு வைத்திருக்கிறாய்.
- உன் விருப்பத்திற்குரிய அடியார் அனைவரும் வந்து. உன் திருவடியைச் சேர்ந்து விட்டார்கள்.
- நானோ பிறவி அச்சத்தால் துன்பத்தில் அமிழ்ந்து கிடக்கிறேன்
- .நான் என்ன செய்வது?
- நின் திருவாய் மலர்ந்து அருளுவாயாக!

பிறவியின் நோக்கம் – வேதாத்தரியம்

இயற்கையின் ஆதி நிலையே தெய்வம் எனப்படுகிறது. அதனுள் அமைந்த வேகம், ஆகாசம் எனும் பரமாணுத்துகளாகி அவையே பிரபஞ்ச ஆற்றல் களமாகியது.

அவ்வாற்றலின் திணிவின் வேறுபாடுகளும், காற்று வெப்பம், நீர், நிலமெனும் மற்ற நான்கு பூதங்களுமாகிய அவை கூட்டால் உயிர்கள் பலவாகியது.

ஐம்புலன்கள் மூலம், தன்னிருப்பு நிலை, இயக்கச் சிறப்புகள், அழகு மதிப்பு இவற்றை உணர்ந்து நிறைவு பெறுகின்றது.

கடைசியில் மனம், உயிர் தன் மூல நிலை இவையறியும் ஆர்வமே ஆறாவது அறிவாக விரிந்தது.

ஐம்புலன்களோடு இயங்கிய உயிர்களின் தொடர்பாக மனித உருவம் வந்ததால் ஆறாவது அறிவு போதிய வளர்ச்சியும் விழிப்பும் பெறும் வரை, புலன்வழி மயங்கி, உணர்ச்சி வயப்பட்டு ஆறுகுணங்களாகிய துன்பம் விளைக்கும் செயல்களை ஆற்றி அவற்றின் விளைவாக பாவப்பதிவுகள் அதிகமாக்கிக் கொண்டது.

புலன் மயக்க மாயையும், தீய செயல்களால் பாவப் பதிவுகளும், தன்னையறியா மயக்கத்தால் ஆணவமும் பெருகி இவையே ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களாகி துன்பங்களும் சிக்கல்களும் வாழ்வில் பெருகின.

சிந்தனை உயர்ந்தபோது தனது மூன்று களங்கங்களை போக்கிக் கொண்டு, அறிவைப் பெருக்கி முழுமையடைந்து, ஆதிநிலை வரைக்கும் விரிந்து அதோடு லயமாக அறிவு செயல்படுகிறது.

எனவே நாம் எந்த செயல் புரிந்தாலும், களங்கம் போக்கவும், அறிவு பெருகவும் அது உதவியாக அமைய வேண்டும்.

அப்போதுதான் இனிமை, அமைதி நிறைவு, மகிழ்ச்சி வாழ்வில் அமையும். குண்டலினியோகம் தவம், தற்சோதனை, குண நல மேன்மை முழுமைப்பேறு இவற்றை அடக்கமாகக் கொண்டதால் உயிர் விடுதலை பெற இது ஏற்ற நல்ல மனச் சாதனையாகும்.

.

தன்முனைப்பை நீக்க - வேதாத்தரியம்

“தன்முனைப்பு நீங்க ஒருகுரு அடைந்து
    தவமாற்றும் சாதனையால் உயரும்போது
நன்முனைப்பாம் அருட்தொண்டால் பயன்காண்போர்கள்
    நாதழுக்கப் பெருமையோடு போற்றுவார்கள்;
உன்முனைப்பு நிலவு ஒளி, ரவியால்போல
    உயர்குருவின் ஒளி, என்றே உணர்ந்தடங்கு.
'என் ஒளியே சிறந்ததினி ரவி ஒளி ஏன்
    எனக்கு?' என்று நிலவு எண்ண இருளே மிஞ்சும்!”. .(ஞாக.பா.1588)

சேர வாரீர் - வேதாத்தரியம்

“பல நாட்கள் தவம் செய்து, கனல் மிகுந்த
    பக்குவமும் தனையறிந்த நிலையும் கொண்டு
நலமொன்றே பலனான ஞானமார்க்கம்
    நாடிநிற்கும் எவர்க்கும் அவர் அறிவிற்கேற்ப
சில நாளில் சீவனையே சிவனாய்க் காணும்
    சிந்தனையின் சிகரத்தில் கொண்டு சேர்த்து
உலக சமாதானப் பெரும் திட்டம் காட்டி
    உயர்ஞானம் உணர்த்துகின்றேன் கொள்வீர், வாரீர்”.(ஞாக.பா.1453)

.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

2. ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன்

இறையுணர்வு பெறும் ஆற்றல் எல்லாருக்கும் உண்டு :

.

“அறிவு ஒரு மறை பொருள். அதைக் கொண்டு தான் பேரியக்க மண்டலப் பொதுவான மறைபொருள் தெய்வ நிலையை உணர முடியும்.

எந்த இயக்கமானாலும் இருப்பு நிலையில்தான் மோதவேண்டும். அதில்தான் முடியவும் வேண்டும்.

இங்கே உணர்ந்து கொள்வது எது? அலையாக இயங்கி மோதுவதா? அல்லது இருப்பாக இருந்து தாங்குவதா? இருப்புதான் உணர்கிறது.

எல்லாத் தோற்றங்களிலுள்ள இயக்க அலையை எங்கும் நிறைவாயுள்ள நிலைபொருள் இருப்பு நிலை – இறைவெளிதான் உணர்வாகப் பெறுகிறது.

ஆகவே இறைவெளியான இருப்பு நிலை பேரறிவு – (□□□□□ □□□□□□□□□□□□□□) எனவும் அகண்டாகாரமாக அது நிறைந்திருப்பதால் (□□□□□□ – □□□□□□□□□□□□□□) வாணறிவு எனவும் போற்றப்படுகிறது.

.

அறிவுதான் நான் என்னும் பொருளாக உள்ளது என்றும் அதுதான் இருப்பு நிலையாக தெய்வமாகவும் உள்ளது என்றும் உணரும் பெரும் பேறு மனிதனுக்குக் கிட்டிவிட்டால் அவன் தெய்வமாகவே திகழும் பெருமையுடையவனாகிறான்.

ஆதி முதல் அணுவரையில் அவனேயாகி அனைத்திலும் அவனே நிறைந்த பொருளாக இருப்பதால் அறிவே தான் நான் என்று உணர்ந்து அதுவே தெய்வமாகவும் இருக்கிறது என்ற பேரறிவில் அவன் எல்லாம் உணரும் ஆற்றல் பெற்றவனாகிறான். இதனை அறிவறிந்த பெரியார் 'வள்ளுவப்' பெருந்தகை

.

“ஐயப்படாது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்”.
என்ற கவி மூலம் விளக்கியிருக்கிறார்.

.

இந்தப் பேரறிவில் விழிப்போடு இருப்பவர்களுக்கு எதைப் பற்றி நினைத்தாலும் அதிலிருந்து வரும் விளக்கம் இறைவனே பேசுவது போல இருக்கும்.

இந்த மனநிலையில்தான் முழுமையான அமைதி மனிதனுக்குக் கிட்டும். அறிவை அறியும் வரை அது குறையுடையதாகவே இருக்கும்.

அந்த நிலையில் பொருள், புகழ், அதிகாரம், புலனின்பம் என்ற நான்கில் தன்னை இணைத்துக் கொண்டு இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்ற குறையுடையதாகவே, வறுமை மிஞ்சியதாகவே இருக்கும். அறிவையறியும் ஆற்றல் அனைவரிடமும் உண்டு. அதற்கு பயிற்சி வழி அகத்தவமும் (□□□□□□□□□□ □□□□□□□□□ □□□□), அறநெறி பற்றி வாழும் முறையும் ஆகும்.

.

அகத்தவமும் அற வாழ்வும்" – வேதாத்திரியம்

"மறைபொருளாம் அறிவு சிவம் இரண்டும் ஒன்றாய் நானாய்
மனிதன் தெய்வமாய்த் திகழும் மாபதம் பேறானால்
இறையுணர்வால் தன்முனைப்புப் பேரறிவாய் மாறும்
எப்போதும் ஈசன் குரல் உள்ளுணர்வாய்க் கேட்கும்;
குறையறிவில் பொருட்கள் புகழ் புலன் இன்பம் இவற்றில்
கொடிய வறுமை பெருகும். நிறைவு கிட்டா வாழ்வில்
நிறைநிலையை எவரெனினும் முயற்சித்தால் பெறலாம்
நேர்வழியோ அகத்தவமும் நிறையற வாழ்வாகும்" .(ஞாக.பா.1671)

"ஆசைப்பட்டு ஆட்படலாம்" என்கிறது திருவாசகம். இதற்கு இறையுணர்வு பெற வேண்டும் என்கிறது வேதாத்திரியம்

"பேசப்பட்டேன் நின் அடி
யாரில் திருநீறே
பூசப்பட்டேன் பூதல
ரால்உன் அடியான் என்று
ஏசப் பட்டேன் இனிப்படு
கின்றது அமையாதால்
ஆசைப்பட்டேன் ஆட்பட்
டேன் உன் அடியேனே." 86

- நின்னுடைய அடியார்களால், நானும் ஓர் அடியார் என்று பேசப்பட்டேன்.
- நின்னுடைய அடியார்கள் போலவே, நானும் திருநீற பூசப்பட்டனே்.
- அதே சமயம் அமைச்சர் பதவியை இழந்து, நின் அடியாராகத் திரிவதாக, உலக மக்களால் இகழ்ந்து உரைக்கப்பட்டேன்.
- இனியும் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு இருக்க முடியாது.
- அதனால் நினது திருவடிகளை வந்து அடைய ஆசைப்பட்டேன்
- உனக்கு அடிமையும் ஆனேன்.
- காத்து அருளுவாயாக!

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

3. தவமும் தற்சோதனையும்

தவம் செய்வதற்கே நேரம் ஒதுக்குவது சிரமமாக இருக்கிறது இந்த [illegible] [illegible]ல். இதில் தற்சோதனை வேறா??? என்று அலுத்துக் கொள்வார்கள் பல நண்பர்கள்.

தற்சோதனை

தவம் உணர்ச்சி வயமாக உள்ள மனதை அமைதிப் படுத்தி, அலை நீளத்தை வெகுவாக குறைக்கிறது. ஆனால் அது மட்டும் போதாது.

தவநிறைவிற்கு மனம் பின் சிறிது நேரம் அமைதிவயப்படும்.
பின் உணர்ச்சிவயப்பட்டு தன் போக்கில் பேயாட்டம் ஆடும்.

தவத்துடன் தற்சோதனையையும் இணைத்தால் மனம் எப்பொழுதும் அமைதியாக இருக்கும்.

நாம் செய்யும் தவறுகளை உணர முடியும்.

இனி செய்யக் கூடாது என்று உறுதியான முடிவை எடுத்து, அதை வாழ்வில் செயல்படுத்த முடியும்.

இதற்கு உறுதுணையாக இருப்பது தற்சோதனை மட்டுமே.

வேறு யாரும் வந்து உங்களுக்காக உங்கள் குணங்களை சீரமைக்க ஓடி வரமாட்டார்கள்.

நமக்கு நாமே.

தற்சோதனையும் தவமும் ஒன்றுக்கொன்று உதவக்கூடியது.

தவம் செய்து தற்சோதனை செய்தால் அமைதியான மனநிலையில் குறைகளை எளிதில் களைய முடியும்.

தற்சோதனையால் தூய்மையடைந்து விட்டால் தவம் மேலும் எளிதாகவும் சிறப்பாகவும் இருக்கும்.

தற்சோதனை பயிற்சி □□□□□□□□ வேறு எந்த தியான மையங்களிலும் இருப்பதாக தெரியவில்லை. மனவளக்கலையில்தான் இருக்கிறது.

சித்தர் பாடல்களில் அவ்வப்போது ஆசை, சினம், காமம் குறித்து நிறைய படித்திருப்போம்.

தற்சோதனைதான் மனிதனை மிருக குணத்திலிருந்து மீட்டு மனம்+இதம் உள்ளவனாக மாற்றும் மந்திரக்கோல்.

மௌனமும் இணைந்தால், சர்க்கரைப் பந்தலில் தேன் மழை போல.

மௌனத்தின் மேன்மை இன்னும் சில நண்பர்களுக்கு புரியவில்லை. தவமும் தற்சோதனையும் இரட்டை நாயனம் என்றால், மௌனம் கச்சேரி களை கட்ட இனிமை சேர்க்கும் தவுல் போல....

கருத்தொடராக நாம் பெற்ற வினைப் பதிவுகள் அனைத்தும் கருமையம் எனும் இயற்கை கம்ப்யூட்டரில் பதிவாகியுள்ளன.

காலத்தால் மலரும் அப்பதிவுகளின் வெளிப்பாடுகளே எண்ணங்கள், செயல் ஆர்வம், நோய்கள், இன்ப துன்பங்கள் அனைத்தும். தேவையற்ற பதிவுகளை வெளியேற்றி ஆன்மதூய்மை அடைய உதவுவது மௌனம் ஒன்றே… ஒரே ஒரு நண்பன்.

மாதத்திற்கு ஒரு நாளாவது மௌனநோன்பு இருத்தல் சிறப்பு. வணிகர்கள் □□□□□□□ □□□□□ கணக்கெடுப்பது போல, நாமும் நம்முள் இருக்கும் □□□□□ ஐ கணக்கெடுத்து, தவம் தற்சோதனையால் நம்மை நாமே ஆன்ம தூய்மை செய்து கொண்டு. அக வாழ்விலும் புற வாழ்வினும் அமைதியாக ஆனந்தமாக சிறப்பாக பயணிப்போம்.

“அடியேன் அல்லேன் கொல்லோ தான் எனை
    ஆட்கொண்டு இலை கொல்லோ
அடியர் ஆனார் எல்லாரும்
    வந்து உன்தாள் சேர்ந்தார்
செடிசேர் உடலம் இது நீக்கமாட்டேன்
    எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக்
    காணுமாறு காணேனே.” 87

- எங்கள் சிவலேகா நாயகனே!
- நான் உன்னுடைய அடியான் இல்லை போலும்.
- நீ என்னை நேரில் வந்து ஆட்கொள்வில்லை போலும்.
- அடியார் ஆனவர் எல்லோரும் முன்பே வந்து நின் திருவடியைச் சேர்ந்து விட்டனர்.
- நானோ தீவினை உடைய இந்த உடலை இன்னும் விட முடியாதவனாய் இருக்கிறேன்.
- கடுமையான இயல்பு உடைய நான், மீண்டும் உன்னைக் காணும், வழி அறியாது நிற்கிறேன்.

தவமா? தற்சோதனையா? எது எதற்கு உதவுகிறது?வேதாத்தரியம்

இரண்டுமே ஒன்றுக்கொன்று உதவக் கூடியவை தான்.

ஒருவன் தன்னிடமுள்ள உணர்ச்சிவயத்தைக் கண்டறிந்து, அது காரணமாக அவன் செய்து வந்த தவறுகளை உணர்ந்து, அவற்றை இனியேனும் செய்யக் கூடாது என முடிவெடுத்துக் கொள்வதும், அம்முடிவைச் செயல்படுத்துவதும் தான் தற்சோதனை.

இத்தற்சோதனை தான் இப்போது ஆன்மீகத்தில் புதிதாக என்னால் சேர்க்கப் பட்டிருக்கிறது.

இவ் உளப் பயிற்சி முறை தான் மனிதனை மிருகக் குணத்திலிருந்து உண்மையில், காரியாம்சத்தில் மீட்கக் கூடியது.

இந்தத் தற்சோதனையை வெற்றியுடன் செய்து முடிப்பதற்கு தான் தவம் உதவுகிறது. வெளிச்சத்தில் ஒரு பொருளை தேடி எடுப்பது போல், தவம் தரும் மன அமைதி நிலையில் தனது குறைகள் தெரியவரும்.

பிறகு அதே தவம் தந்த மன உறுதியை கொண்டு, அவற்றை நீக்கவும் முடியும். அதே போல், தற்சோதனையால் தூய்மையடைந்து விட்டால் தவம் எளிதாகவும், சிறப்பாகவும் அமைகிறது.

இந்த இரண்டையும் கொண்டு மனித குல வாழ்க்கையைத் தெய்வீக வாழ்க்கையாக மாற்றிக் கொள்ளலாம். வேறு வழி இல்லை – என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி.

“மாசற்ற ஒளி ஊடே மறைந்திருக்கும் இருள் போல
ஈசன் அறிவில் இருக்கும் நிலை”. (வேதாத்திரியம்)

“வேண்டியதற்கு படிகட்டி வேண்டாததை வடிகட்டும்
எண்ணமே உள்மன அமைதிக்கு உரம்”. (வேதாத்திரியம்)

“மனம் தன்னை தூய்மை செய்து கொள்ள
எடுக்கும் முயற்சியே தற்சோதனை”. (வேதாத்திரியம்)

அகத்தவத்தின் பெருமை: வேதாத்திரியம்

அகத் தவத்தின் பொருள் கண்டு
    அதன் பெருமை உணர்ந்திடுவீர்!
அகத் தவமோ உயிரினிலே
    அறிவை ஒடுக்கும் பயிற்சி!
அகத் தவத்தால் மேலும் உயிர்
    அம்மாகி மெய்ப்பொருளாம்!
அகத் தவத்தால் வீடுணர்ந்து
    அமைதி பெற்று இன்புறலாம்! (ஞாக.பா.1496)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

4. கடவுளை காண வழி இருக்கிறதா?

கடவுளை அடைவதற்கு என்னென்ன வழிமுறைகள் உள்ளன? என நிறையை பேர் யோசிப்பது உண்டு.

இன்று உலக மக்கள் தொகையில் எத்தனை பேர் உள்ளார்களோ நாளைக்கு எத்தனை பேர் வருவார்களோ அத்தனை வழிகள் கடவுளை அடைவதற்கு உண்டு.

நான் கடவுளை அடைய வேண்டும் என்ற எண்ணமும் விடாமுயற்சியும் இருந்தாலே போதுமானது. தானாக வழி தெரியும். ஏனென்றால் கடவுளுக்கு எல்லா திசையும் ஒன்று தான்.

அவர் குறிப்பிட்ட திசையை மட்டும் நோக்கிக் கொண்டிருந்தால் அந்த திசையை மட்டும் தான் நாம் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும். கடவுளிடம் அந்த பிரச்சனையில்லை. ஆனாலும் கூட நமது

புராணங்கள் கடவுளை அடைந்தவர்கள் பயணித்த வழியில் சில பாதையை காட்டுகிறது.

- சுகதேவரோ கடவுளை பற்றி சொன்னதாலேயே அவரை அடைந்தார்.
- நாரத மகரிஷி மனதால் நினைத்ததன் மூலம் நாராயணனை அடைந்தார்.
- திருமகளான மகாலஷ்மி பாத சேவை செய்தே திருமாலை அடைந்தார்.
- யது மகாராஜா வழிபாட்டு மூலமாக இறைவனை அடைந்தார்
- .ரத சாரதியான அக்ருவர் பிராத்தனை மூலமே கடவுளை அடைந்தார்.
- மகாவீரனான அனுமான் பணிவு மூலமாகவும்,
- அர்ஜுனன் நட்பு மூலமாகவும்,
- பலி சக்கரவர்த்தி சமர்ப்பணம் மூலமாகவும்
- விஸ்வாமித்திர மகரிஷி விடா முயற்சினாலும் கடவுளை அடைந்தார்கள்.
- நமது காலத்தில் பக்தியின் மூலமாக ராமகிருஷ்ண பரமஹம்சரும்
- ஞானத்தின் மூலமாக சுவாமி விவேகானந்தர், ரமண மகரிஷியும்,
- துறவின் மூலமாக தாயுமானவரும்
- ஜீவ காருண்யத்தின் மூலமாக வள்ளலாரும்,
- தொண்டால் வேதாத்திரி மகரிஷியும் கடவுளை அடைந்திருக்கிறார்கள்.

அவரை அடைவதற்கு வழி எது என விசாரிப்பதை விட அடைந்தே தீருவேன் என முயற்சி செய்வதே சிறந்த மார்க்கமாகும்.

“காணுமாறு காணேன் உன்னை
    அந்நாள் கண்டேனும்
பாணே பேசி என் தன்னைப்
    படுத்தது என்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆர் அமுதே
    அத்தா செத்தே போயினேன்

ஏd; நாண் இல்லா நாயினேன்
என்கொண்டு எழுகேன் எம்மானே.” 88

- மேலான ஒளிப் பழம்பே!
- ஆணே! பெண்ணே!
- தெவிட்டாத அமுதமே!
- தந்தையே! எம் தலைவனே!
- இப்பொழுது உன்னை, நான் காண முடியாதவனாய் இருக்கிறேன்.
- ஆனால் முன்பு திருப்பெருந்துறையில் என்னைக் கண்டபோது. இனிய சொற்கள் பேசி, என்னை அடிமை கொண்டாய்.
- தவ வலிமை இல்லாத நான், என்ன செய்து, இதிலிருந்து மீண்டு. உன்னை வந்து அடைவேன்?

கடவுளைக் காண கருத்தவமே போதும் வேதாத்தரியம்.

“அகத்தவத்தால் மனச்சுழலைப் படிப்படியாய்க் குறைத்து,
ஆதிநிலை ஒன்றுவரை பழக்கமாக்கிக் கொண்டால்,
இகத்துணர்வோ டெல்லையிலா இறைநிலையும் உணர,
ஏற்றபடி அவ்வப்போ பொருந்திவரக் காண்போம்.
மிகத்தெளிவும் உள்ளுணர்வும் முற்றறிவும் கிட்டும்.
மூலம்எனும் இறைமுதலாய் மனிதன்வரை வந்த
மகத்துவமாம், முத்தரமே முத்திறமாய் மலர்ந்து
மறைபொருளை அறிவுணரும். பிரம்மஞானம் கிட்டும்.”
(ஞாக.பா.1445)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

5. அறுகுண சீரமைப்பு தரும் ஆனந்த வாழ்வு

மனித குலம் வாழத் தொடங்கி ஆங்காங்கே துண்டு துண்டாக வாழ்ந்து அந்தந்த இடத்திற்கு ஏற்பத் தன் செயலை உருவாக்கிக்

கொண்டது. காலம் செல்லச் செல்ல பொருட்களின் எண்ணிக்கை அளவிலே பெருகிவிட்டன.

அவற்றைத் துய்க்கும் முறைகளும் கூடிவிட்டன. அந்தப் பொருட்களை அனுபவிக்கின்றபோது தோன்றிய சிக்கல்கள் அவற்றைத் தீர்க்கும் வழிகள் இவையெல்லாம் விரிந்து போய் விட்டன.

இதையொட்டி அவ்வப்போது ஆங்காங்கே மக்களுக்குக் கருத்தும் செயலும் உருவாகி விட்டன. புலன்கள் வழியே செயலாற்றிப் பலவிதமான பதிவுகளை உடலிலேயும் மனதிலேயும் கொண்டுள்ளோம்.

இதைத் தாண்டி "நான் யார்? எதற்காகப் பிறவி எடுத்திருக்கிறேன்? நான் என்ன செயல் செய்து கொண்டிருக்கிறேன்? எங்கே போய்க் கொண்டிருக்கிறேன்? எப்படிப் போக வேண்டும்? என்றெல்லாம் தெரிந்து கொள்வதற்குச் சிந்தனை வேண்டும்.

புலன் வழி செயல்களிலே உணர்ச்சி வயப்பட்ட செயல்கள் உருவாகும். அதனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான தன்மை அடைந்திருக்கிறோம்.

அந்தத் தன்மைகளில் வேறுபாடுகள் உள்ளன. உருவமைப்பு, குணம், அறிவின் உயர்வு, புகழ் (கீர்த்தி), உடல் வலிவு, சுகம், செல்வம் என்ற ஏழு மதிப்புகளில் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டு இருப்பது இயல்பாகவே இருக்கிறது.

இவையெல்லாம் ஏன் ஏற்பட்டன? நாம் பிறந்தது முதற்கொண்டு எண்ணிய எண்ணங்கள், செய்த செயல்கள், சொன்ன சொற்கள் யாவும் நம்மிடத்தில் பதிவாகி உள்ளன. அப்பதிவுகள் மீண்டும் மீண்டும் எழுச்சி பெறுகின்றன.

அப்பதிவுகளை வினைப் பதிவுகள் என்கிறோம். அப்பதிவின் வழியே செயலாற்றும்போது பேராசை, சினம், கடும்பற்று, உயர்வு தாழ்வு மனப்பான்மை, முறையற்ற பால்கவர்ச்சி, வஞ்சம் என்ற ஆறு தீய குணங்கள் உண்டாகின்றன.

இந்த அறுகுணங்களைப் போக்கி கொண்டு, அதாவது நம்மிடம் உள்ள பதிவுகளை நீக்கிக் கொண்டு நல்வினைகளைச் செய்து செய்து வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கு நமது பெரியோர்கள் இரண்டு வழிகளைச் சொல்லி இருக்கின்றார்கள்.

“திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி இளைப்பினை நீக்க இருவழி உண்டு கிளைக்கும் தனக்கும் அக்கேடில் புகழ்வோன் விளைக்கும் தவம் அறம் மேற்றுணையாமே. என்று திருமூலர் பாடியிருக்கிறார்.

பதிவுகளாகிய பாவக் கடலிலேயிருந்து தன்னை மீட்டுக் கொள்ள கரையேற்றிக் கொள்வதற்காக வாழ்க்கையென்ற படகிலிருந்து கொண்டு விடுதலை பெற முயற்சிகள் எடுக்கிறான்; கடக்க முடியவில்லை, தவிக்கிறான், சோர்ந்து போகிறான்.

அப்பொழுது மனதை வலுப்படுத்தி, ஒருமைப்படுத்தி, திடப்படுத்தி, தெளிவுபடுத்தி உண்மையை விளங்கிப் கொள்ளத் தக்க உளப்பயிற்சி வேண்டும்.

அகத்தவம் வேண்டும். அதன்றி பாவப் பதிவுகளை மாற்றித் தூய்மை செய்து கொள்ள முடியாது. பழைய நினைவுகளால் உடலுறுப்புகள் வினைவழியே இயங்கும் ஆர்வம் எழாதவண்ணம் தன்னைக் காத்துக் கொண்டு, வினைத் தூய்மையின் வழியாக அறவழியே வாழ்ந்து கொண்டு வர வேண்டும்.

ஆகவே, தவமும் அறமும் வேண்டும். இவையிரண்டும் தான் மனிதன் உய்வதற்கு வழிகள். அகத்தவமும், ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்றுமிணைந்த அறநெறியும் பின்பற்றி வாழும்போது எழ வழியில்லை.

அகத்தவத்தால் இறைநிலையோடு எண்ணம் இணைந்து விடுவதால், அவனே தானாக இருக்கும் உண்மையினை உணர்ந்து கொள்ள முடிகிறது. அந்த இடத்தில் தன்முனைப்பு போய்விடுகிறது.

தான், தனது என்று சொல்லிக் கொள்ள தன்பற்றோ, பொருள் பற்றோ இருக்க வழியில்லை. பொருள் வழியே மனம் செல்லும்போது ஆசை பேராசையாக மாறுகிறது.

அந்த ஆசை தடைப்படும்போது, அந்தத் தடையை நீக்குவதற்காக உடல் வேகம் கூடும்போதுதான் சினம் என்பது உண்டாகிறது. அந்த ஆசையும் சினமும் இரண்டும் சேர்ந்து விடாப்பிடியாக பொருளைப் பற்றிக் கொண்டு மற்றொருவர் தொடாமல் பார்த்துக் கொள்கின்றன.

அது மட்டுமல்ல, இன்னும் மற்ற பொருட்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறது. இதுவே “கடும்பற்று.

இதேபோன்று, பால் உறவிலே மிதமிஞ்சிய ஓர் ஒழுக்கம் மீறிப் போகிறபோது முறையற்ற பால்கவர்ச்சி எழுகிறது. அவர் பெரியவராக இருக்கிறார். நான் சிறியவனாக இருக்கிறேன்.

அவருக்கு அதிகமாக இருக்கிறது. எனக்குக் குறைவாக இருக்கிறது என்று எண்ணி, பொறாமை முதலிய எல்லாவற்றையும் விளைவிக்கக்கூடியது உயர்வு தாழ்வு மனப்பான்மை. காலத்தாலே அல்லது எனக்கு வலு வரும்போது நான் தீர்த்துக் கொள்வேன் என்று

சினத்தை அளவிலே இருப்புப் கட்டி வைத்து, காலத்தையும் வாய்ப்பையும் எதிர்பார்த்துக் கொண்டே வளர்ந்து வந்த சினம் இருக்கிறது.

அந்த இருப்பு கட்டிய சினம்தான் ‘வஞ்சம்’ ஆகவே எதுவுமே தனியா இல்லை.

ஆசை பேராசையாகி விடும்போது, அதிலிருந்து வந்தவைதான் அறுகுணங்கள், அதனால் ஆசையை முறைப்படுத்தி இறைவனோடு இணைந்து விட்டால், அது எங்கோ போய்ச் சேர வேண்டுமோ அங்கே போய்ச் சேர்ந்து விட்டால், அதன் பிறகு அதன் திசை மாறி இந்த ஆறு குணங்களாக எழாது. இதுவரையில் ஏற்பட்ட அறுகுணங்களும், நற்குணங்களாக மாற்றம் பெற்று விடும்.

பேராசை – நிறைமனமாக, சினம் – சகிப்புத் தன்மையாக, கடும்பற்று – ஈகையாக, முறையற்ற பால் கவர்ச்சி – கற்பாக, உயர்வு தாழ்வு மனப்பான்மை – நேர் நிறை உணர்வாக, வஞ்சம் – மன்னிப்பாக மாறிவிடும். இறை நிலை உணர்ந்து மனிதன் தன்னுடைய தன் முனைப்பை விட்டு விட்டானேயானால் அங்கே உணர்ச்சி வயப்படும் அறுகுணங்களும் அவற்றின் கீழ் ஆற்றப்பட்ட பழிச் செயல் பதிவுகளும் கரைந்து போகின்றன.

இறையருள் சுரந்து இன்பம் ஓங்கும். பழிச்செயல்கள் பதிவுகள் கரைந்து, ஆன்மீக அறிவு ஓங்கி, வாழ்வில் தெளிவும் அமைதியும் இனிமையும் விளையும். பிறவிப் பயனை அடையலாம். அருள் ஒளி மிக்க வாழ்வினைப் பெறலாம்.

“மான் நேர் நோக்கி உமையாள் பங்கா
    மறை ஈறு அறியா மறையோனே
தேனே அமுதே சிந்தைக்கு அரியாய்
    சிறியேன் பிழை பொறுக்கும்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன்
    சிவம் மாநகர் குறுகப்
போனார் அடியார் யானும் பொய்யும்

புறமே போந்தோமே.” 89

- மான் போன்ற பார்வை உடைய உமையவளை உடம்பில் பாகமாக உடையவனே!
- வேதங்களாலும் முடிவு காண முடியாத வேதியனே!
- தேனே! அமுதமே!
- மனதுக்கு எட்டாத தூரத்தில் இருப்பவனே!
- சிறியேனாகிய எனது பிழைகளை எல்லாம், பொறுத்து அருளும் தலைவனே!
- உன்னுடைய அடியார்கள் எல்லாம் சிவபுரத்திற்குச் சென்று சேர்ந்து விட்டனர்.
- ஆனால் யானோ சிறிது கடுஞ்சொல் கூறியதால் என் உடம்பும் எனது பொய் ஒழுக்கமும் உம் உலகுக்குப் புறம்பாக உள்ள இவ்வுலகிலேயே இருந்து விட்டன.

அறுகுணச் சீரமைப்பு வேண்டும் – வேதாத்திரியம்

அறுகுணம் என்பது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற பெயர்களில் வடநூலார் குறிப்பிட்டுள்ள ஆறுவகை மனோ நிலைகள்.

இவை தமிழ் மொழியில் முறையே பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு-தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என விளக்கப்படுகின்றன.

இவை எல்லா உயிர்களிடத்தும் அமைந்துள்ளன. மனிதனிடம் இந்த மனோ நிலைகள் எழுச்சி பெறும் போது தீய செயல்களைச் செய்து விடுவான். அதனால் பொருள் அழிவும், மகிழ்ச்சி இழப்பும் விளையும்.

தெளிந்த அறிவோடும், விழிப்போடும் இருந்தால் இந்த ஆறு மனோ நிலைகளில் பேராசையை – நிறை மனமாகவும்; சினத்தைப் – பொறுமையுடமையாகவும்; கடும் பற்றை – ஈகையாகவும்; முறையற்ற பால் வேட்பைக் கற்பாகவும்; உயர்வு – தாழ்வு மனப்பானமையை – நேர் நிறையுணர்வாகவும்; வஞ்சத்தை –

மன்னிப்பாகவும் சீரமைத்துக் கொள்ளலாம். தனக்கும் பிறர்க்கும், தற்காலத்திலும், பிற்காலத்திலும், அறிவிற்கும், உடல் உணர்ச்சிக்கும் வருத்தம் எழாத அளவிலும், முறையிலும் செயலாற்றி இன்பமாக வாழலாம்.

தேவையும், பழக்கமும் சூழ்நிலைகளும் உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றன.

அனுபவ நினைவுகளும், சிந்தனையும், தெளிவும் அளிக்கின்ற நல்ல முடிவைக் கொண்டு உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் திறனே “அறிவு” எனப்படும்.

உணர்ச்சிகளால் அறிவு மயங்கித் தனது நிலை மறந்து செயலாற்றினால் அதனை “மயக்கம்” அல்லது “மாயை” என்று கூறுகிறோம். அறிவு நிலை குலைந்த மயக்கத்தில் தான் தீய செயல்கள் விளைகின்றன.

“எல்லையில்லா இறைநிலையைப் போல
எல்லை இல்லாத தெய்வத்தன்மை வாய்ந்தது பொறுமை”

“சினத்தினால் திருத்தம் வரவே வராது.
சினத்தினால் ஏதாவது வரும் என்றால்
அங்கு வருத்தம் தான் வரும்”..

அறுகுண விளைவுகள் – வேதாத்திரியம்

““உளவியலை ஆராய்ந்தால், அறு குணங்கள்
உடலில் நோய்பல விளைத்தல் அறிந்து கொள்வோம்.
அளவிலா விருப்பு, கடும் பற்றிரண்டும்
அல்லல் தரும்குன்மநோய் உண்டுபண்ணும்.
பிளவுசெய் சினம், குருதி அழுத்தம், மார்நோய்,
பித்து, புண், கண்நோய்கள், தாது, மூளை
வளமழிவு செய்யும். மிகை மோகம் கட்ட

வகை கண் யோய், நீரிழிவுசெய்யும். வஞ்சம்
உளஅமைதி, உடல்வலிவு போக்கி மார்நோய்
உண்டாக்கும். தொடர்புநோய் பலவும் காட்டும்."(ஞாக.பா.1591)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

6. ஆன்மீகத்தில் நல்லொழுக்கம்

ஆன்மீகத்தின் அடிப்படை நல்லொழுக்கம். இதை சமஸ்க்ருதத்தில் சத்-நல் ஆசாரம்-ஒழுக்கம் அதாவது சதாசாரம் என்கிறார்கள்.

அதைத்தான் அட்டாங்க யோகத்தின் இயமம் (தீயொழுக்கம் களைதல்), நியமம் (நல்லொழுக்கம் பயில்தல்).

ஒழுக்கம் "விழுப்பம்" தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

அதென்ன விழுப்பம்? விழுப்பம் என்றால் சிறப்பு,மேன்மை! ஒழுக்கத்தால் என்ன மேன்மை அடையமுடியும்?!

ஒழுக்கம் உடல் சார்ந்த இன்பங்களைத் தாண்டிய மனதைக் கடந்த ஏதோ ஒன்று இருக்கிறது. அதை உணர வேண்டும் என்ற ஆவலைத் தரும்.

அதைத்தான் தேடல்=முமுக்ஷுத்வம் என்கிறோம். நல்லொழுக்கம் இல்லாதவனின் தேடல் பொருள் மற்றும் புலன்சார்ந்த தேடலாகத் தான் இருக்கும்.

கோவிலுக்குப் போனாலும் சைட்டடிப்பதே தலையாய கடமையாய்ச் செய்வான். புலன்வழி சிதறிய மனம் அடங்க நல்லொழுக்கமே வித்து! அதைச் செய்யாமல் மூச்சடக்கி வாசி தியானம் சமாதி என்பதெல்லாம் சாத்தியமே இல்லை.

ஆன்மீகத்தில் ஆன்மாவை நோக்கி முன்னேற மனது ஆடாத நிலை பெற அன்றாட வாழ்வில் மிதமான போக்கு தேவை. புலன் நுகர்வு விலக்கல்ல. புலன் மயக்கம் தவறு. என்ன தவறு? அது விருப்பம் ,சிறப்பான ஆன்மத் தேடலில் நம்மை ஈடுபட விடாது.

உணவு,காமம்,உறக்கம்,செல்வந்துய்த்தல்,....அளவாக இருக்க நம் மனதில் ஆன்ம நாட்டம் என்ற கதவு மெல்லத் திறக்கும்!
நம் வாக்கிலும் செயலிலும் ஒரு அருள் கலக்கும். நல்லெண்ணமே மேலிடும்.

சரி! இதை ஒத்துக் கொண்டாலும் ஒழுக்கமா வாழுறது கஷ்டமா இருக்கே! என்ன செய்ய?!
அதுக்குத்தான் அஞ்சுவேள தொழுடா, ப்ரதோஷம்னா கோவிலுக்குப் போ, வைகுண்ட ஏகாதசிக்கு கோவில் போ, ஈஸ்டர்னா சர்ச்சுக்குப் போங்குறது!

!நல்லொழுக்கம்

நாம ஃபோர்ஸ் பண்ணாம நல்லது என்னிக்காவது செய்வோமா?! மாட்டமே!

நல்லொழுக்கத்துக்கு இன்னொரு வழி நல்லோர் தொடர்பு. அது நேரடித் தொடர்போ,சொற்பொழிவுகளோ அல்லது புத்தகங்களோ! ஏதோ ஒன்று நம்மை நல்வழிக்கு மாற்றுவதாயிருந்தால் ஒழுக்கம் துளிர்விடத் தொடங்கும்.

அவ்வை சொல்கிறார்,
நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று”

பொய்மை ஒழுக்கம் உடைய நான், உண்மை அன்பைப் பெறுவதற்கான, ஆற்றலை இழந்தவனாக இருக்கிறேன்” என்ற மாணிக்கவாசகர் இப்பாடலில் பாடுகிறார்.

“புறமே போந்தோம் பொய்யும்

யானும் மெய் அன்பு
பெறவே வல்லேன் அல்லா
வண்ணம் பெற்றேன் யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார்
மற்று ஒன்று அறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே
நின்தாள் சேர்ந்தாரே.” 90

- சிவபெருமானே! உன்னைத் தொடர்பு கொண்ட அடியார்கள், வேற எதையும் சிந்திக்காது,
- நினது செந்நெறியைப் பற்றி,
- நின்னுடைய திருவடிகளை அடைந்து விட்டனர்.
- நானோ உம்மைப் பின் தொடராது. வேறுபக்கம் சென்று விட்டேன்.
- பொய்மை ஒழுக்கம் உடைய நான்,
- உண்மை அன்பைப் பெறுவதற்கான, ஆற்றலை இழந்தவனாக இருக்கிறேன்.

இன்னா செய்யா நோன்பு – வேதாத்திரியம்

“ஒழுக்கமெனில் உயிர்க்கு இன்ன செய்யா நோன்பாம்.
ஒருவர்பிறர்க் கோதனக்கோ, உடனோ, பின்னோ,
வழுக்கியும் தீமைசெய்யா உணர்வு அஃது
வாழ்வோர்க்கு இதற்குமேல் என்ன வேண்டும்?
அழுக்காறு, பேராசை, சினம்கடுஞ் சொல்
ஐந்துபெரும் பழிச் செயல்கள் தவிர்த்த வாழ்வால்,
பழுத்துவரும் அறிவுபர உணர்வு ஊறும்,
பன்னலமும் அறநெறியும் இயல்பாய்ப் போகும்.” (ஞாக.பா.452)

எந்த உயிர்களுக்கும் துன்பம் ஏற்படாத வகையிலே எண்ணம், சொல், செயல்களை ஒழுங்குபடுத்திக் கொண்டு வாழ்வதுதான் உயர்ந்த ஒழுக்கம் எனப்படும்

நில உலகில் வாழ்கின்ற உயிர்களுக்கு அதுவே பாதுகாப்பு ஆகும். அமைதிக்கான கருவும் ஆகும்.

ஒழுக்கம் என்பதுதான் மனித வாழ்வை உயர்த்தக் கூடியது.

ஆகையால் உயிரைவிட ஒழுக்கம் மேலானதாகக் கருதப்படுகிறது.

அறிவை உயர்த்தி, அறிவில் தெளிவு பெற்று முழுமைப்பேறு அடைய எல்லா மனிதர்க்கும் ஒழுக்கமே பெரிய துணையாக உள்ளது.

உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே எல்லாவற்றிலும் எல்லாமாக இருந்து இயக்கிக் காத்து முடித்தும் வைக்கக் கூடிய தெய்வமாகவும் உள்ளது என்பவற்றை உணர்ந்தவர்கள் அறிவை அறிந்த அறிஞர் பெருமக்கள் ஆவர்.

உயிர்களைக் காக்கும் கருணையினால் அவர்கள் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்தி மேலான முறையில் வாழ்வதற்கான நெறிமுறைகளை அறிவித்துள்ளார்கள் என்ற உண்மைகளைத் தெரிந்து கொள்வவோம்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

7. நல்லாரிணக்கமும் சத்சங்கமும்

சத்சங்கத்தின் அர்த்தமானது பூரண சத்தியமான இறைவனின் சங்கம் என்பதாகும். அதாவது ‘சத்’ என்பது பூரண சத்தியத்தையும் ‘சங்கம்’ என்பது ஸாதகர்கள் அல்லது மகான்களின் சகவாசம் என்பதாகும்.

சுருக்கமாக சொல்வதெனில் சத்சங்கம் இறைவனின் இருப்பை அனுபவிப்பதற்கு உகந்த சூழலாகும்.

நாமஜபம் செய்ய துவங்கிய பின் ஒருவர் செய்யக்கூடிய அடுத்தகட்ட பயிற்சி இதுவாகும்.

அதனால் நாமஜபம் செய்வது நிறுத்தப்படும் என்பது பொருளல்ல. இறைவனின் நாமத்தை உச்சரிப்பதோடு சத்சங்கங்களுக்கும் செல்ல வேண்டும்.

ஒரே எண்ணம் கொண்ட (அதாவது இறைவனை உணர்தல்) நபர்களுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல் செய்வதற்கு இது ஏதுவாக அமையும்.

சத்சங்கம் என்பதின் அர்த்தத்தை புரிந்துக்கொள்வதாலும் சத்சங்கத்திற்கு செல்வதாலும் பல நன்மைகளை பெற முடியும்.

ஆன்மீக சாஸ்திரத்தை பற்றிய சந்தேகங்களை கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ள முடியும்.

ஆன்மீக பயிற்சி அல்லது ஆன்மீக தத்துவங்கள் தொடர்பாக ஏதேனும் ஐயமிருப்பின் அவை உடனுக்குடன் தெளிவுபடுத்தப்படவேண்டும்.

இல்லாவிட்டால் மனப்பூர்வமாக ஆன்மீக பயிற்சியை மேற்கொள்ள முடியாது போகும்.

ஒருவர் தன்னுடைய ஆன்மீக அனுபவத்தை பகிர முடிவதோடு அதற்குரிய ஆன்மீக முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள முடிகிறது.

மற்றவரின் நம்பிக்கை பற்றி தெரிந்து கொள்வது நமக்கு ஆன்மீகப் பயிற்சியினை தொடர்ச்சியாக செய்ய ஊக்கம் அளிக்கிறது.

சூட்சும நிலையில் ஒருவர் தெய்வீக உணர்வினை (சைதன்யம்) சத்சங்கம் மூலம் பெறுகிறார்.

சத்சங்கத்தின் அதிகரிக்கப்பட்ட சாத்வீக தன்மை ஒருவரின் ஆன்மீக பயிற்சிக்கு பெரிதும் உதவுகிறது.

சுற்றுச்சூழலில் உள்ள ரஜதம அணுக்களால் ஆன்மீக மாசடைவு ஏற்படுவதால் இறைவனை பற்றி நினைப்பதற்கும் ஆன்மீக பயிற்சி செய்வதற்கும் கடினமாக உள்ளது.

இருப்பினும் நாள் முழுவதும் நாமஜபம் செய்பவர்களின் சகவாசத்தில் இருக்கும்போது இதற்கு எதிர்மாறான பலன் கிடைக்கிறது! ஸாதகர்களிடமிருந்து வெளிப்படும் சாத்வீக அதிர்வலைகளால் அல்லது தெய்வீக உணர்வினால் நாம் பயனடைகிறோம்.

சத்சங்கத்தினுள் நுழையும் போது வாழ்க்கையில் மிகவும் அடிபட்டு வேதனையுடன் சென்றாலும் சத்சங்கம் முடிவடைந்து வெளியேறும்போது உள்ளிருந்து புதுப்பிக்கப்பட்டு முற்றிலும் புதிதாக உணருவோம்.

தொடர்ந்து சத்சங்கம் செல்லும்போது நாம் நமது ஆன்மீக பயிற்சியில் திடமான நிலையை அடைகின்றோம். இதன் பலனாக நாம் நம் வாழ்வின் ஆன்மீக நோக்கமான இறைவனை உணர்ந்தே தீர வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையை பெறுகிறோம்

“தாராய் உடையாய் அடியேற்கு
 உன்தாள் இணை அன்பு
பேரா உலகம் புக்கார் அடியார்
 புறமே போந்தேன் யான்
ஊர் ஆ மிலைக்கக் குருட்டு ஆமிலைத்துஆங்கு
 உன்தாள் இணை அன்புக்கு
ஆரா அடியேன் அயலே
 மயல் கொண்டு அழுகேனே.” 91

- எல்லாம் உடையவனே!
- உன்னுடைய அடியார்கள், இணையான நினது திருவடிகளில் அன்பு செலுத்தி, மீளா உலகம் சென்று சேர்ந்தனர்.

- யானோ வேற பக்கம் போய்விட்டேன்.
- ஊரில் உள்ள பசுக்கள் கனைக்க, அவற்றுடன் சேர்ந்து மேயப் போன குருட்டுப் பசுவும் கனைப்பது போல அந்த அடியார்களோடு என்னையும், உன் இணையான திருவடிகளில் Nrர்த்துக் கொள்வாயாக!
- திராத அன்பு உடயவனாய், நானும் உன்னை அடைய முடியாமல், கலக்கம் உற்று, அழுது கொண்டு இருக்கிறேன்.

அறிவை அறியும் பயிற்சி - வேதாத்திரியம்

"தன்னிலை அறிவறிய அகநோக்கி நிற்கின்ற
 தவமுறை பயில வேண்டும்.
அந்நிலை 1) குருநாடி, 2) மூல ஆதார நிலை,
 3) அசைவில் துரியநிலை 4) நேர்
முன்னிலை இலா துரிய அதீதநிலை, 5) அறுகுணம்
 முனையாது காத்தீட நிலை.
இந்நிலைகள் ஐந்தையும் குருமூலம் அறியலாம்.
 ஏற்றவர் கருதவத் தால்." (ஞாக.பா1461.)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

8. விழிப்பு நிலை சீவன்முக்தி

"பலமுறையும் அழுது பார்த்து விட்டேன். நான் எதனை பற்றுக் கோடாக் கொண்டு, நின்னை வந்து பணிவது?" என்ற மாணிக்கவாசகர் கேட்கிறார்.

இறைநிலையை எய்த இறையுணர்வு என்ற பற்று கோடு வேண்டும். இறையுணர்வு பெறுவது எப்படி? விடையாக வருகிறது வேதாத்திரியம்.

நுண்மாண் நுழைபுலன் அறிவோடு விழிப்பு நிலையில் செயல் படும்போது இறையுணர்வு கிட்டும்.

தனக்கென ஒரு ஒழுக்கநெறி (பாதை) கைகொண்டு அது வழி வரும் சோதனைகளை அறிவினால் சீர்செய்து கவனமுடன் (விழிப்புடன்) வாழ்ந்து வந்தால் தானாய் வரும் (போகும் போக்கில்) இறையுணர்வு.

நம் எண்ணம் சொல் செயல் இவற்றை நல் வழிப்படுத்தல் மிகவும் அவசியம்.

ஏனெனில் இது வரை நம் பழக்க வழக்கம் நம் உடல் உயிர் பதிவுகளாகி நம் சீவன் களங்கப்பட்டுள்ளது.

அதை சீர்படுத்தி மனம் ஒரு நிலை படுத்தி தவம் முறையாக செய்து இறைவுணர்வு பெறலாம்.மகரிஷி அருளிய மனவளக்கலை பயின்று இறையுணர்வு பயன் பெறலாம்.

அகத்தவம் மூலம் எண்ணங்களை சீர் செய்து கருமையை களங்கங்களை போக்கினாலே இறையுணர்வு கிட்டும் என்ற கருத்து மிகவும் உண்மையான கருத்து।

ஒழுக்கம்,ஈகை,கடமை,எண்ணம்,சொல்,செயல்,ஐந்தில் அளவு முறை சரியானால் இறையுணர்வு ஏற்படும்

எண்ணம் , செயல் இரண்டிலும் விழிப்பு நிலை ஏற்பட்டால் மனம் தூய்மை பெறும். அறுகுணங்களும் அறுக்கப்பட்டு மனம் தூய்மை அடைந்த நிலையில் இறையுணர்வு கிட்டும்.

அறுகுணங்களும் அறுக்கப்பட்டு மனம் தூய்மை அடைந்த நிலையில் இறையுணர்வு கிட்டும்.

“செயல்களால் சிந்தனையும், அதன் உயர்வும்
    சிந்தனையால் செயல்பலவும் ஒன்றால் ஒன்றாம்.
செயல்எண்ணப் பதிவுகளே மனிதன் தன்மை.,
    சிந்திப்பீர்! இதனைவிட வேறு நீயார்?
செயல்எண்ணம் பழக்கவழி ஓடும் மட்டும்,
    சிற்றறிவாய் துன்புற்று வருந்தும் சீவன்.,

செயல்எண்ணம் இரண்டினிலும் விழிப்பு கொண்டால்,
சிவத்தன்மை சீவனில் பேரறிவாய் ஓங்கும்."(ஞாக.பா648)

முன்னோர்கள் செய்த வினைகளின் வித்தாக வந்துள்ள நாம் பழைய பதிவுகளின் பழக்கத்தில் ஐயுணர்வின் வழி வாழ்வதால் துன்பம் மிகுதியாகவும், இன்பத்தை நிரந்தரமின்மை யாகவும், வாழுகின்ற நிலையில் ஆராய்ந்து பார்த்தால்

நான் யார் என்கின்ற ஆராய்ச்சியின் முடிவில் இறையாற்றலே நாமாக வந்துள்ளோம் என உணரும்போது,

துன்பம் இல்லாமல் வாழும் முறையும், துன்ப படும் உயிர்களுக்கு உதவி செய்து வாழும் முறையும்தான் சிவத்தன்மை என்ற பேரறிவு சீவனுக்குள் விளங்கி ஒளிறும்.

இயற்கையை முழுமையாக உணரும்போது இறையுணர்வு தானாகவே வெளிப்படும்.

மகரிஷியின் கூற்றுப்படி ஒருவர் அகத்தாய்வு, அகத்தவம் பயின்று கருமையத் தூய்மை பெற்று, நான் யார் என்ற பிரமஞான அறிவைப் பெற்று அறிவில் முழுமைப் பேறு அடையும் நிலையை எட்டும் போதே இறையுணர்வு ஏற்படும்.

.

"அழுகேன் நின்பால் அன்பாம்
மனம் ஆய் அழல் சேர்ந்த
மெழுகே அன்னார் மின்ஆர்
பொன் ஆர் கழல் கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தா
ரோடும் தொடராதே
பழுதே பிறந்தேன் என் கொண்டு
உன்னைப் பணிகேனே." 92

- நின்னிடம் அன்பு பொருந்திய மனம் உடைய அடியார்கள்,

- மின்னல் போன்ற பொன் மயமான நினது திருவடிகளை கண்டு, நெருப்பில் பட்ட மெழுகு போல உருகி,தொழுது,
- உன்னைப்பின் தொடர்ந்து, வந்து சேர்ந்துவிட்டனர்.
- நானோ அவ்வாறு பின் தொடர முடியாத, குற்றம் உடைய பிறப்பு உடையவனாய் இருக்கிறேன்.
- பலமுறையும் அழுது பார்த்து விட்டேன். நான் எதனை பற்றுக் கோடாக் கொண்டு, நின்னை வந்து பணிவது?

ஆன்மீக அறிவே அமைதி நல்கும் – வேதாத்தரியம்

"உலகத்தில் அமைதியது உருவாகி நிலைக்க,
உயிரறிவு இறையுணர்வு கடமையறம் எங்கும்
பலநாட்டு மக்களது வாழ்வினில் பரவி,
பண்பாடாய் ஊடுருவி நிலைக்கும் முறை வேண்டும்.
சிலதலைவர்,அரசியலார். பொருள் துறையார்,மதத்தார்
சேர்ந்தாலும், அன்னவரால் ஒருக்காலும் அமைதி
நிலவ வழியுண்டாக. நீடிக்கும் பகை, போர்
நேர்வழியே அறிவறியும் ஆன்மீக நெறி." (ஞாக.பா.1437)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

9. அறிவின் அகநோக்குப் பயணம்

மனதை ஆய்வு செய்து தனது குறைகளைப் போக்கி தானும் இன்புற்று வாழ்வதோடு சமுதாயத்திற்கும் துன்பமளிக்காமல் நன்மை செய்து வாழ்வதே அகத்தாய்வின் நோக்கமாகும்.

தற்சோதனை

தற்சோதனை என்பது தன்னை சோதித்துக் கொள்வது. தனது குறை நிறைகளை தெரிந்து கொள்வது. இப்பயிற்சியின் நோக்கம்.
(1) தன்னைப் பற்றி சிந்தித்துப் பார்த்தல்

(2) தனது குறைகளை உணர்தல்
(3) குறைகளை நீக்க வழி வகுத்தல்
(4) வகுத்த வழியே வாழ்ந்து காட்டுதல்.

வினைப்பதிவு

மனிதன் எந்தச் செயல் செய்தாலும் உடலில் ஓடிக் கொண்டிருக்கும், ஏற்படும் தாக்கங்கள் அனைத்தும் கருமையத்தில் போய்ச் சேருகின்றன. இந்த நிகழ்ச்சியை வினைப்பதிவு என்று கூறுகிறோம்.

பதிவு என்றால் இங்கு எழுதி விளக்கக் கூடியதோ, அல்லது புலன்களுக்கு எட்டும்படியாக அடையாளம் கொடுக்கக் கூடியதோ அன்று.

எண்ணம்

எண்ணுவதையே செய்யுங்கள்! அதற்கும் மேல் இன்னொருபடி போங்கள்.செய்ய முடிவதையே எண்ணுங்கள்!!

"பணிவார் பிணி தீர்த்து அருளிப்
பழைய அடியார்க்கு உன்
அணி ஆர் பாதம் கொடுத்தி
அதுவும் அரிது என்றால்
திணி ஆர் மூங்கில் அனையேன்
வினையைப் பொடி ஆக்கித்
தணி ஆர் பாதம் வந்து ஒல்லை தாராய்
பொய்தீர் மெய்யானே." 93

- பொய் ஒழிந்த மெய்ப்பொருளே!
- உன்னை வந்து பணியும், பழைய அடியார்களின் பிறவி நோயைப் போக்கி,
- அவர்களுக்கு உனது அழகிய திருவடிகளைக் கொடுத்து அருள் செய்தாய்.

- அதனை எனக்குத் தருவது அரியது எனில், வலிய மூங்கில் போன்ற கடுமையான அடியேனது, வினைகளை எரித்துச் சாம்பல் ஆக்கிப் பின், நினது குளிர்ந்த திருவடிகளை, விரைந்து தந்து அருளுவாயாக!

அறிவின் அகநோக்குப் பயணம் – வேதாத்திரியம்

"ஆன்மிகத் துறையென்ற அகலவழிப் பாதையிலே,
அடிவைத்து மென்மேலும்முன்னேறிப் போகுங்கால்
அறிவுபெறும் அனுபவங்கள் வியப்பாகும். இனிமையாம்
ஆன்மஒளி சுடர்விட்டு உள்ளுணர்வுப் பேறாகும்!
ஊன்உருவமான உடல் ஊர்தியென்னும் ஊடே,
உயிர்என்ற சூக்குமமே "நான்" என்ற உணர்வு வரும்.
ஒடுங்க ஒடுங்கக் காணும் உண்மையோ அறிவதுவே!
உயிரிலிருந்து ஓங்கியெழுந்து உடல்உலகம் வெளிவிரியும்."
ஞாக.பா.1434)

"நான்" அதுவே இறைநிலை மெய்ப்பொருள் தெய்வமெனும்
நன்முடிவு விளக்கமாம். அந்தமமு முதற்பொருளே
நல்ல ஒழுங்காற்றலாய், நல்லுணர்வாய், அறிவறியும்
நல் ஊற்றாய்த் திருவருளாய், நல்லின்ப வெள்ளமாய்,
தேன்பொழியும் பேரின்பம் திகட்டாது! சலிக்காது!
திருத்தங்கள் எண்ணம்சொல் செயல்களிலே மலர்ந்துவரும்!
செருக்கொழித்து தான் அடங்கித் தெய்வநிலை எங்கெதிலும்
திருவருளின் காட்சியாம்! திரும்புங்கள் உட்புறமாய்!"
(ஞாக.பா.1434)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

10. அழுதே சாதித்தார்கள் ஞானிகள்

“யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே”

யானே பொய் – எனது இந்த உடல் பொய்! அழிந்து போக கூடியது! எவன்டா, இந்த உடம்புக்கு போய் ‘மெய்’ என்று பெயர் வைத்தது!?

என் நெஞ்சும் பொய் – என் நெஞ்சில், வஞ்சம், பொய், பொறாமை, கோபம், லோபம், மூடம், மதம், ஆங்காரம் இன்னும் இது போன்ற எல்லா துர்குணங்களும் நிரம்பி வழிகிறது என் நெஞ்சமும் பொய்தானே!
என் அன்பும் பொய் – நான் என் தாய், தந்தை என் மனைவி என் பிள்ளைகள் என் சகோதர சகோதரிகள் என் உறவினர் என் வீடு என் என் என்னுடையது என்றே திரிகிறேன்.

என் சாமி என இறைவனையும் ஆக்கி கொண்டேன்.

இப்படி இருந்தால் என்னிடம் என்ன இருக்கும் பொய், பித்தலாட்டம் ஏமாற்று தான் மிஞ்சும்! ஆக இதெல்லாம் பொய்யாய் இருக்க காரணம் அடியேன் முற்பிறவிகளில் செய்த வினைகள்தான்?!

இதுவே வேதங்கள் கூறும் உண்மை! ஞானிகள் உணர்ந்த சத்தியம்! இதுவே நம் சனாதன தர்மம் உரைப்பது!

இப்படி பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து பொய்யிலே வாழும் நாமும் “அழுதால் பெறலாம் அவனருளை” எப்படி?

நாம் செய்த பாவத்தை நினைத்து அழு! இனி பாவம் செய்யாதிரு! நீ யாருக்கும் கெடுதல் செய்யாதே! உன் பெற்றோர் குறிப்பாக தாய் பத்து மாதம் உன்னை சுமந்து பட்ட துன்பத்தை பின் ஒவ்வொரு நாளும் வளர்க்கபட்ட துன்பத்தை நினைத்து அழு!

உன் உயிருள்ளவரை மாத பிதாவை வணங்கி போற்றி வாழ வைத்து வாழு! என் போன்று எல்லாவற்றையும் படைத்தானே யாரோ ஒருவன் யாரோ ஒருத்தி இல்லை ஏதோ ஒரு சக்தி அதை காண வேண்டுமென்று அழு! நன்றாக அழு! குமுறி குமுறி அழு! பைத்தியாகாரன் என்பர் உலகர்! பொருட்படுத்தாதே! நீ மட்டும் அழுவதை நிறுத்தாதே! இதெல்லாம் நீ உருப்பெற வழிகாட்டும்! உண்மை உணர வழிகாட்டும்! சோகத்தில் – இழப்பில் – நஸ்டத்தில் அழுவது மன ஆறுதல் மட்டுமே தரும்!

மாணிக்கவாசகர், வள்ளலார் மற்றும் உலகத்தில் உள்ள எல்லா ஞானிகளும், சித்தர்களும் அழுதால் பெறலாம் இறைவன் அருளை என அழுத்தம் திருத்தமாக கூறியிருக்கின்றனர்.

“அழுதால் உன்னை பெறலாமே” என்றார் மாணிக்கவாசகர்.
“நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான நடத்தரசே”
என்றார் வள்ளலார்.

“கண்ணீரோடு விதைக்கிறவன் கம்பீரத்தோடு அறுப்பான்” என்றார் இயேசு (▯▯▯▯▯) பெருமான்!

ஒரு சித்தர் அவர் பெயர் அழுகண்ணி சித்தர் என்றனர்! அவர் எப்பொழுதும் அழுது கொண்டேயிருப்பாராம்.
அதனால் எல்லாரும் அழுகண்ணி சித்தர் என்றனர்.

“காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி” என்றார் திருஞானசம்பந்தர்!

இப்படி இன்னும் பல ஞானியர் இறைவனை அடைவதற்காக அழத்தான் சொன்னார்கள்!

இறைவன் திருவடிகளே நமது கண்கள் என குரு மூலம் அறிந்து உணர்ந்து இருந்தாலே கண்ணீர் பெருகி வழியும்! இப்படியே அழுது அழுது உங்கள் பாவங்கள் கரையும் வரை இறை ஒளி காணும் வரை அழுது கொண்டேயிருங்கள்!

எந்த தாயாவது பிள்ளை அழுவதை பார்த்து கொண்டு சும்மா இருப்பாளா? ஒடோடி வர மாட்டாளா? ஆம், வருவாள் தாய்! அமுதம் தருவாள்! ஏதுமறியா மூன்று வயது குழந்தை அழுததை கண்டு ஒடோடி வந்து பால் கொடுத்தாளே பார்வதி!!

அந்த ஞானக்குழந்தை திருஞானசம்பந்தனை போல, திருவருட்பிர் காச வள்ளலாருக்கு 9 வயதில் பசியால் அயர்ந்து தூங்கிய போது தட்டி எழுப்பி அன்னம் கொடுத்து அருள் புரிந்தாலே தாய்!! அந்தத் தாய் – வாலைத்தாய் – அழும் குழந்தை எல்லாருக்கும் அமுதம் தருவாள்! சத்தியம்!

அழுது, ஒளிபெருகி, அமுது பருகி, ஒலி கேட்டு, ஒளி கண்டு பேரின்பம் பெறலாம்! நம்மை படைத்தவனை பார்க்கலாம்! அவணடி சேரலாம்! ஞானம் பெற, இறையருள் பெற எப்படி அழ வேண்டும் என்பதை தகுந்த குருவிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

“அழுத பிள்ளை பால் குடிக்கும்” என்பது தமிழ் பழமொழி. இது அநேகமாக பல்வேறு மொழிகளிலும் உள்ள பழமொழி. ஏசு கிறிஸ்துவும் மலைப் பிரசங்கத்தில் “அழுகின்றவான்களே பாக்கியவான்கள் ஏனெனில் அவர்கள் ஆறுதல் அடைவார்கள்” என்று சொல்லக் கேட்டிருக்கிறோம்.

அழுதே கடவுளை அடைந்தவர்கள் அல்லது அவன் அருளைப் பெற்றவர்கள் இந்து மதத்தில் நிறைய பேர் உண்டு.

துச்சாதனனால் துகில் உரிக்கப்பட்ட திரவுபதி தன் மானத்தைக் காக்க எவ்வளவு கதறியும் யாரும் காப்பாற்றவில்லை. அதுவரை புடவையை ஒரு கையால் பற்றி இருந்த திரவுபதி, இரு கைகளையும் உயர்த்தி கண்ணா காப்பாற்று என்று கதறியவுடன் இறைவனே வந்து ஆடை கொடுத்தான்.

இதனால் “எனக்கு எப்போதும் துக்கமே தா கண்ணா, அப்போதுதான் உன் நினைவு நீங்காது நிற்கிறது” என்பாள் இன்னொரு பெண்மணி: “துன்பக் கண்ணீரைத் துடைக்கும் உன் தரிசனம் துன்பம் வரும்போது கிட்டுவதால் அடிக்கடி துன்பம் வரட்டும் என்பது என் பிரார்த்தனை”– இது குந்தியின் பிராத்தனை.

முதலையிடம் சிக்கிய ஒரு யானையை எவ்வளவோ யானைகள் மீட்க முயன்றும் பலனில்லாமற் போகவே, ஆதிமூலமே என்று கதறியது அந்த யானை. உடனே கஜேந்திர மோட்சமளிக்க கருட வாஹனத்தில் ஏறி விரைந்தோடி வந்தான் விஷ்ணு பகவான்.

கண்ணனும் பகவத் கீதையில் தன்னை நான்குவிதமான பக்தர்கள் நாடுகின்றனர் என்றும் அவர்களுக்குத் தான் அருள் பாலிப்பதாகவும் சொல்கிறான்.

அர்ஜுனா! துன்பம் அடைந்தோன், ஞானத்தைத் தேடுவோன், செல்வத்தை நாடுவோன், ஞானி ஆகிய நால்வரும் என்னைப் பூஜிக்கும் புண்யவான்கள் ஆவர்.(பகவத் கீதை 7–16)

இதன் தாத்பர்யம் என்னவென்றால், ஒருவன் அழும் நிலைக்கு துக்கம் வரும்போது பரிபூரண சரணாகதி அடைந்து விடுகிறான். அதற்கு முன்வரை, ”தான்” என்னும் அகங்காரத்துடன் சாம, தான, பேத, தண்டம் என்ற நான்கு விதமான உபாயங்களையும் கடைப் பிடித்துப் பார்க்கிறான்.

மாணிக்க வாசகர் சொல்லுவதைக் கேட்போம்.

“யானே பொய் என்நெஞ்சும் பொய்
என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனை வந்து உறுமாறே” 94

- தேனே! அமுதமே!
- கருப்பஞ்சாற்றின் தெளிவே!
- அடியார்களுக்கு இன்பம் மிகுவிக்கும் பெரியோனே!
- நான் பொய்யனேன்.
- என் மனமும் பொய், நான் செய்யும் அன்பும் பொய்யானது.
- தீவினை உடையவனாகிய நான் அழுதால் உன்னைப் பெறலாம் அல்லவா?
- சிறியேனாகிய நான் உன்னை வந்து அடையுமாறு அருள் செய்வாயாக!

மறைபொருட்களை உணரும் நிலை – வேதாத்திரியம்.

பிரம்மஞானம் உலகில் மக்கள் அனைவருக்கும் பரவாமல் தடைப்பட்டதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. அதை உணர்ந்து கொண்டு, தக்க முறையில் அந்தத் தடைகளைக் களைய வேண்டும். தடைக்குக் காரணங்களாவன:

.

அனைத்தியக்க அருட்பேராற்றலான இறைநிலை – பிரம்மம், அதிலிருந்து தோன்றிய விண், விண் சூழலிருந்து தோன்றிய காந்தம், காந்தத் தன்மாற்றங்களாகிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இவற்றின் கடைசி அலை இயக்கமாகிய மனம்.

.

இவையனைத்தும் மறை பொருட்கள். இவை இல்லையென்று மறுத்துக் கூற முடியாது. இவ்வாறு உள்ளன என்று புலனறிவுக்கு எடுத்துக் காட்டவும் முடியாது.

ஆயினும் இவற்றை அறிவதற்காகவே ஆறாவது அறிவு எனும் சிந்தனையாற்றல் மனிதனிடம் அமைந்திருக்கிறது. ஐந்து புலன்கள் மூலம் தோற்றப் பொருட்களை உணர்வது ஐயறிவு.

புலன்கள் மூலம் உணரப் பெறும் பொருட்களுக்கு மூலமான மனம், காந்தம், விண், மெய்ப்பொருள் இவற்றை உணரக்கூடிய அறிவு தான் ஆறாவது அறிவு. புலன்களால் பொருட்களை உணரும்போது மன அலைச்சுழல் மிகவும் விரைவாக இயங்குகிறது.

அந்த விரைவு நிலையில் மறைபொருட்கள் விளங்கா. மன அலைச் சுழல் விரைவை அகத்தவச் சாதனையால் குறைத்து, அந்த நுண்ணிய நிலையில் தான் மறைபொருட்களை உணர முடியும் என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி.

அகத்தவப் பயன் - வேதாத்திரியம்

"இறைநிலைக்கும் மனநிலைக்கும் இடையிலுள்ள உயிரை
 எளிதாக உணர்ந்திடலாம் அகத்தவத்தின் மூலம்
மறைவிளக்கும் உண்மைகளை மனத்தினுள் உணர்வாய்
 மற்றவர்கள் காட்டுவதற்கு வெளியில் ஒன்றும் இல்லை
பொறையுடைமை, விழிப்புநிலை, அஞ்சாமை, தியாகம்
 புலனுணர்வு இன்பத்தில் அளவு முறை வேண்டும்.
நிறைவுபெற முடிவு எடுத்து வழுவாது ஆற்றி
 நேர்மையுடன் வாழ உன்னில் அவன் – அவனில் நீயே."
(வேதாத்தரியம்)

.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் ஆனந்த பரவசம்

YOUTUBE LINK

1. அச்சத்தாலே ஆழ்ந்திடுன்றேன் https://youtu.be/fN-Yt5mipCU
2. ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன் https://youtu.be/DOE1fZgpAMA
3. தவமும் தற்சோதனையும் https://youtu.be/ATW2KIZa_PQ
4. கடவுளை காண வழி இருக்கிறதா? https://youtu.be/mKW3XJf1qTE
5. அறுகுண சீரமைப்பு தரும் ஆனந்த வாழ்வு

   https://youtu.be/JpWGnRL11M

6. ஆன்மீகத்தில் நல்லொழுக்கம் https://youtu.be/ZdUoXPNYBN8
7. நல்லாரிணக்கமும் சத்சங்கமும் https://youtu.be/Y8GSWIzj8Ho
8. விழிப்பு நிலை சீவன்முக்தி https://youtu.be/ubURAL4C9Eo
9. அறிவின் அகநோக்குப் பயணம் https://youtu.be/imbeKy4CgvI
10. அழுதே சாதித்தார்கள் ஞானிகள் https://youtu.be/d53MVC1yt24

துணைநின்ற நூல்கள்.

1. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
4. இணையதள தகவல்கள்.
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
7. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை
8. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
வாழாப்பத்து


vazhga valamudan
MANNARGUDI BANUKUMAR
FOUNDATION TRUST
MANNARGUDI BANUKUMAR
FREE PDF DIRECTORIES
With links to over 2,000 video and audio recordings on YouTube...

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அச்சோ பதிகம்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
ஆசைப்
பத்து...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

வேதாத்திரியப்
பார்வையில்
வறுமை
என்பது
இல்லை...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
குழைத்தப் பத்து...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
செத்திலாப்
பத்து...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.

வேதாத்திரியப் பார்வையில்
திருவாசகத்தின்
அதிசயப் பத்து...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
யாத்திரைப் பத்து...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
குயில் பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அருட்பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அற்புதப் பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
கண்ட பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
குலாப்பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
சென்னிப் பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
புணர்ச்சிப்பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
ஆனந்த
பரவசம்